ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

एतावन्तं भवसुखमिदं कालमाप्तं समस्तं
माभूदेतत् सुखमिति उपर्यस्य मेऽद्धा स्मरारे ।
त्वत्पादाब्जस्मरणजसुखं प्राप्तुमात्तादरोऽहं
दत्वा तन्मे परमकृपया दीनदीनस्य पाहि ॥ १३ ॥

𑌏𑌤𑌾𑌵𑌨𑍍𑌤𑌂 𑌭𑌵𑌸𑍁𑌖𑌮𑌿𑌦𑌂 𑌕𑌾𑌲𑌮𑌾𑌪𑍍𑌤𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂
𑌮𑌾𑌭𑍂𑌦𑍇𑌤𑌤𑍍 𑌸𑍁𑌖𑌮𑌿𑌤𑌿 𑌉𑌪𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑍇𑌽𑌦𑍍𑌧𑌾 𑌸𑍍𑌮𑌰𑌾𑌰𑍇 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌸𑍍𑌮𑌰𑌣𑌜𑌸𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌦𑌰𑍋𑌽𑌹𑌂
𑌦𑌤𑍍𑌵𑌾 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌪𑌰𑌮𑌕𑍃𑌪𑌯𑌾 𑌦𑍀𑌨𑌦𑍀𑌨𑌸𑍍𑌯 𑌪𑌾𑌹𑌿 ॥ ௧௩ ॥

இப்பிரவி ஏற்பட்டதுமுதல் இன்றுவரையில் அதாவது சுமார் 50 வருடகாலமாகப் பிரஸித்தியாய் அக்ஞர்களால் கூறப்படும் இந்த ஸம்ஸாரஸுகமானது அனுபவித்தாய்விட்டது. இதற்குமேலும் இந்த ஸுகத்தைப் பெறவேண்டுமென்கிற விருப்பம் எனக்கில்லை. ஆகையால் ஹே ஸ்மராரே! மன்மதனுக்குச்சத்ருவாகிய ஹே பரமேச்வர! உமது சரணாரவிந்தங்களை இடைவிடாமல் ஸ்மரணம் செய்துகொண்டு அதினால் ஏற்படும் ஸுகத்தை அடையவேண்டுமென்று மிகவும் அவாவுள்ளவனாக இருக்கிறேன். உமக்கிருக்கும் இயற்கையான கருணையால் அந்த ஸுகத்தை எனக்கு அளித்து என்னைப் பாதுகார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெகுகாலமாக ஸம்ஸாரஸமுத்திரத்திலமிழ்ந்து அதிலுள்ள ஸுகதுக்கங்களை நன்கு அனுபவித்து இனி இதிலொன்றும் உபயோகமில்லை என்று மிகவும் வெறுப்பையடைந்து ஸ்ரீ பகவானுடைய சரண த்யானத்தை விட்டால் வேறு கதியில்லை என்று கருதி பகவானிடம் தன் அனுபவத்தை எடுத்துக்கூறி என்றுமழிவில்லாத நித்யஸுகத்தைப் பெறுவதற்குச் சிறந்த ஸாதனமான உமது பாதபத்மங்களின் தியானத்தில் எப்பொழுதும் என்சித்தம் இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமென்று ஒரு பக்தர் பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

4-84

# ஆர்ய தர்மம்.

விபவ-௵ புரட்டாசி-மீ ௨௲௨

## ஐயவினு.

(438-வது பக்கத்தொடர்ச்சி)

மஹாபாரதத்தில் ஆநுசாஸநபர்வத்தில் 77, 152-வது அத்தியாயங்களிலும் சாந்திபர்வாவிலும் இவ்விஷயங்களைப்பற்றி வெகு விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பின்னும் தமிழ்ப்புலவர்களில் பலராலும் சிறந்த பிரமாணமாக அங்கீகரிக்கப்பட்ட பெரிய புராணத்தில் 'திருநாளைப்போவார்' எனப்பெயர்வாய்ந்த ஒரு பக்தரின் சரித்திரம் நன்கு கூறப்பட்டிருக்கிறது. இவர் ஜாதியில் புலையர் என்பது பிரஸித்தம் இவரை நந்தனொன்று உலகிலுள்ளார் சொல்வார்கள். இவரைப்பற்றி அந்தப்புராணத்தில் எவ்விதம் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் கொஞ்சம் கவனிக்கவேண்டியதாதலால் அதையும் கொஞ்சம் விசாரிப்பபாம். ஷை புராணத்தில் 37 செய்யுட்களால் நமது நந்தனருடைய சரித்திரத்தை ஆறுமுகநாவலரவர்கள் சுருக்கமாக வசனநடையில் மிகத்தெளிவாய்க் கூறியிருக்கிறார். அதில் பல சிவஸ்தலங்கட்குச்சென்று வணங்கித் திருப்பணி செய்தலே தொழிலாகக்கொண்ட இந்தப் பக்தருக்குச் சிதம்பரதெரிசனஞ் செய்ய அவா மேலிட்டது.

இவ்வேட்கையின் மிகுதி அது விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரையின்மையாலும், மற்றநாள் இவர் தான் தில்லைக்குச் செல்லின் கோயிலினுள்ளே புகுதல் தமது ஜாதிக்கிசையாது என்பதை நினைந்துபோகாதொழிந்தாராயினும், அவ்வாசை குன்றாது மேன்மேலும் வளர்தல்பற்றி நாளை போவேன், நாளை போவேன் எனப் பலநாள் கழித்து ஆசையை அடக்கல்கூடாமையால் பின் தில்லையின் எல்லையை அடைந்தமையானும் தெளியப்படும். இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும் தில்லையினுள்ளே வேதவிதிப்படி ஓமம் செய்வதைக்கண்டு உட்புகாதொழிந்து இரவு பகல் திரு

வெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால் வேதாகமவிதிக்கு அஞ்சி சாதிநெறி தவாது நின்ற இவரது பெருந்தன்மை துணியப்படும் என்று விளக்கிக் காட்டியிருக்கிறார். இங்கு மஹானான நந்தனார் கோவிலுட்புகுவது தம் ஜாதிக்கிசையாதென்று சொல்லியிருப்பதையும், இரவு பகல் அத்திருவெல்லையைமாத்திரம் வலஞ்செய்து வணங்கினார் என்று கூறியிருப்பதையும் நன்கு கவனிக்க வேண்டும். இக்காலத்திய தீண்டாதவர்களுக்கும் அவர்களை முன்னேற்றக்கங்கணம் பூண்டுமுயற்சிப்பவர்களுக்கும் ஆலயத்திற்குள் இவர்கள் செல்லாமலிருப்பது பெருங்குறையென்று தோன்றுகிறது. நந்தனாருக்கு ஆலயஞ்சென்றால் தமக்கு அதிக பாவம் சம்பவிக்கும் என்று தோன்றி விலகிவிட்டார். இவ்விதம் அந்த ஜாதியிலுதித்தமஹானால் ஆலயம் புகுவது தீண்டாதாற்குத்தகாத காரியம் என்று ஸ்பஷ்டமாய் அனுஷ்டித்துக் காட்டியும் அதை அற்பமேனும் கவனியாது ஹிதத்தைக் கூறும் பிறரையும் தூஷித்துப்பாபகர்மாவையே நாங்கள் செய்வோமென்றால் கலியாசனின் கொடுமையைத் தவிர வேறு யாது கூறமுடியும். இதுவரை விளக்கிக் காட்டப்பட்ட வாக்கியங்களையும், இவைபோல் சாஸ்திரங்களில் இன்னும் கோடிக்கணக்காய்க்காணப்படும் வசனங்களையும் உண்மையான நோக்கத்துடன் பார்வையிட எவனுக்குத்தான் இத்தீண்டாமை தற்காலத்து வேதியர்களுடைய அகம்பாவத்தினால் ஏற்பட்ட புதிய கோட்பாடென்று சொல்ல தைரியம்வரும் கீழ்ஜாதியார்களிடத்தில் மேல் ஜாதியார் அகம்பாவத்தைக் காட்டுகிறார் என்று கூறுவது முற்றிலும் தவறேயாகும். மனு, பராசரர் முதலிய மஹரிஷிகளுக்கும் கெட்ட எண்ணத்தைக் கற்பிக்கும்படியான காலம் நேர்ந்துவிட்டது அவர்களுடைய திவ்ய ஞானத்தையும் நிஷ்பக்ஷபாதத் தன்மையையும் ஒப்புக்கொள்ளாதவர் ஹிந்து என்று தன்னைச் சொல்லிக்கொள்ள அர்ஹமில்லாதவராகிறார். சாஸ்திரங்களில் கூறியவாறு வைதிகதர்மானுஷ்டானத்தைச் செய்யவேண்டுமென்று கருதியே மேற்கண்ட விதிகள் ஏற்பட்டனவேயன்றி வேறுகாரணமில்லை. இதையறியாமலும் சாஸ்திரார்த்தங்களை உற்று நோக்காமலும் தமக்குத்தோன்றியவாறு உத்கோஷம் செய்வதிலும் சாஸ்திரசித்தாந்தம் இவ்விதம்தான் என்று நன்கு அறியாத மற்றவர்களை ஏமாற்றுவதிலும் யாது பயன் தங்களுக்குக் கிட்டுமென்று கருதி முன்வந்திருக்கிறார்களோ அறி

யோம். தீண்டாமையை ஒழிப்பதென்கிற இந்தக் காரியமானது இந்து சாஸ்திரங்கட்கு நேர் விரோதமானதென்று இதுவரையில் எம்மால் நிரூபிக்கப்பட்ட விஷயங்களிலிருந்தும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

கனம் மாளவ்யா முதலானவர்கள் தீண்டாதவர்களிடம் வைதிகப் பிராமணர் அனுவசியமான தோஷங்களைக் கூறி அவர்களை கஷ்டப்படுத்துகிறார்கள். தீண்டாதவர்களை நாம் விலகும்படிச் சொல்வதாலும் கிராமக்கிணறு, குளம், கோயில் முதலிய இடங்களில் அவர்களை பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதால் அதிக கஷ்டத்தை அடைகிறார்கள். எல்லா ஜனங்களையும் கஷ்டமின்றி சுகமாயிருக்கும்படிச் செய்யவேண்டியது நமது கடமையிருக்க, அதைவிட்டு நாம் மாத்திரம் சுகமாயிருந்துகொண்டு பிறரைக் கஷ்டப்படுத்துவது நியாயமாகுமா. ஆகையால் தீண்டாமை முதலிய சில கெட்ட வழக்கங்களை விட்டு அவர்களையும் சுகமாயிருக்கும்படி செய்யவேண்டியது நமது கடமை என்றும், அதை உத்தேசித்துத் தீண்டாதவர்களிடத்தில் தாங்கள் அன்பு பாராட்ட முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

பொதுவாய் ஒரு பிராணி கஷ்டப்பட்டால் எதுவாயிருந்தாலும் நம்மாலியன்றவரை அதற்கு உதவிபுரிந்து அக்கஷ்டத்தை விலக்கவேண்டிய கடமை நமக்குண்டு. இந்தக் கடமையைதீண்டத்தகாதவர்களிடமும் நாம் செலுத்தவேண்டியது அவசியம்.

உபபத்திராதிபர்.

---

# புராண தத்வ விமரிசம்.

(446-வது பக்கத்தொடர்ச்சி.)

நெடுங்காலமாகப்பெருமையுடன் முன்னோர்களால் போற்றப்பட்ட புராணங்களைக்காலவித்யாஸத்தால் சிலமஹான்கள் தோன்றிப் புராணங்கள் கல்பிதமென்றும் சிலர் தங்களுக்கு அனுகூலமாக ஏற்படுத்திக்கொண்ட கட்டுக்கதைகள் நிரம்பினவையென்றும் சொல்வதும்தவிர பத்திரிகைகளிலும் எழுதிவருகிறார்கள்.

சிலவிடங்களில் தர்மசாஸ்திரங்களையும், புராணங்களையும் கொளுத்திவருவதாயும் தெரிகிறது. சில பிரபுக்கள் ஐயோ வியாஸர் காலத்தில் நாம் பிறக்கவில்லையே பிறந்திருந்தால் அவரையும் அழித்து இந்தப் புராணங்களையும் வெளிக்கிளம்பாமல் செய்திருக்கலாமேயென்று தங்கள் முன்னோர்களை நிந்திப்பதாயும் கேழ்வைப்படுகிறோம். பல தேசங்களிலும் பல பாஷைகளில் ஏராளமாக அச்சுக்கூடங்களில் பிரசுரமாயிருப்பதால் இன்ன செய்வது என்று புலப்படாமல் தபிக்கிறார்கள். புராணங்களை கற்பனையென்று புலம்பும் புத்திமான்கள் வேதசமபந்தமுள்ளதும் வாஸ்தவமானதுமான புராணங்கள் தங்களுக்குத் தெரிந்திருந்தால் கட்டாயம் வெளியிட்டுப் பிரசுரம் செய்யலாமே. அப்படிப்பட்ட உண்மை புராணங்களை வெளியிட்டால் நாமும் அதன்படி நடக்க சித்தமாக இருக்கிறோம். வீணாக மஹரிஷிகளின் வாக்காயும் வேதங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதுமான புராணங்களை தூஷிப்பதில் யாது பயன். இவர்களுக்கும் வேதபாஹ்யாளுக்கும் என்னவித்யாஸம். ஆனால் புராணங்களில் பெயர்களின் வித்தியாஸம் முதலிய சிறு பிழைகள் ஏற்படுவது சகஜமே. அதுவும் பழையபனை ஓலைப் பிரதியிலிருந்து தர்ஜமா செய்தவர்களின் தவறுதலாயிருக்குமேயொழிய கிரந்தகர்த்தாக்கள் அபிப்பிராயம் ஒருக்காலும் பிசகாகவே இருக்காது. புராணங்களை தூஷிக்கும் சில பிரபுக்கள் புராணங்களில் ஜாதிப் பிரிவினை முதலிய விஷயங்கள் காணப்படுவதால் கட்டுக்கதை என்று சொல்லுகிறார்கள். ஜாதிப் பிரிவினை புராணங்களில் மட்டும் சொல்லப்படவில்லை. அனாதிவாக்கான வேதமே ஜாதிப்பிரிவினையை உணர்த்துகிறது மிகப் பழமையானக் கிரந்தம். ஸ்ரீமத்ராமாயணம் கிரந்தகர்த்தா வால்மீகி ரிஷி. இந்த மகரிஷியைப்பற்றி எந்த சரித்திர ஆராய்ச்சிக்காரரும் இன்ன இடத்தில் எந்த காலத்தில் வஸித்து வந்தார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. இப்பேர்பட்ட மஹானால் இயற்றப்பட்ட கிரந்தத்தை ஆழ்ந்து பார்த்தால் ஜாதிவித்தியாஸம் பட்டண நிர்மாணம், அஸ்திசாஸ்திரப் பிரயோகம், சொல் தவறாமை ஆடையாபரணங்களின் வர்ணனை, ராஜநீதி, பதிபக்தி, ஸகோதர வாத்ஸல்யம், ஸ்னேகமுறை, ருதுவர்ணனை, இன்னும் எண்ணிறந்த விஷயங்கள் புலப்படுகின்றன. சிலர் ஒரு ஜாதிக்குப்புராணங்களில் விசேஷ அனுகூலங்கள் ஏற்படுத்தியிருப்பதாகத் தப்பு

அபிப்பிராயப்பட்டு புராணங்கள் சரியானபடி எழுதப்படவில்லை
என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் புராணங்களிலும் தர்
மசாஸ்திரங்களிலும் ஏற்படுத்தியிருக்கும் காயக்லேசம் அனுஷ்
டானம் முதலிய தர்மங்கள் சகிக்க முடியாதது. அதை ஊன்றிப்
பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். வேதங்களில் கூறப்படும்
புராணங்கள் தங்களுக்கு அவசியமில்லை என்றால் இவர்களின் உத்
பத்தி. முன்னோர்களின் நடை உடைமுதலியவைகளுக்கு ஆதா
மெது என்பதை இவர்கள் நிரூபிக்க வேண்டாமா. புராணங்க
ளில் சிலவிடத்தில் ஸாமுத்ரிகா லக்ஷணம் என்னும் ஸ்திரீ புருஷ
சரீர சாஸ்திரம் காணப்படுகிறது. அதன் பலன் சரீர அமைப்பை
அடிப்படையாகக் கொண்டது. கொஞ்சகாலத்துக்கு முன் நம்
முடைய தேசத்துக்குப் படையெடுத்துவந்த மகம்மதியர்களின்
உபத்திரவத்தால் அவர்களின் நாகரீகத்தில் சிக்கிக்கொண்ட சிலர்
தங்களுக்கும் தங்கள் சந்ததிகளுக்கும் சரீரத்தில் சில மாறுதலைச்
செய்துகொண்டார்கள். சிலர் நடந்த நூற்றாண்டின் பிற்பாதி
முதல் தலையில் சில மாறுதலையும் நடை உடை மாறுதலையும் செ
ய்து கொண்டிருக்கிறார்கள். முன்னோர்களுக்கும் இவர்களுக்கும்
உள்ளவித்தியாஸங்கள்புராணங்களில்பிரத்தியக்ஷமாய்காணப்படுவ
தால் புராணங்களைக் கட்டுக்கதையென்று சொல்வதைத் தவிர
இவர்களுக்கு வேறு மார்க்கமில்லை. மேலும் நம்முடைய வேதத்தி
லும் புராணங்களிலும் பஞ்சபூதங்களான பூமி, ஜலம், அக்னி, கா
ற்று ஆகாயம், இவைகளைத்தெய்வமாக பூஜிக்கும்படி சொல்லியிரு
க்கிறது. வேதபாஹ்யாள் இவைகளை ரொம்ப அலக்ஷ்யமாக நினைத்
திருக்கிறார்கள். ஸகலவிதத்திலும் அவர்களைப் பின்பற்றும் இவர்
களுக்குப்புராணங்களில் விசுவாசம்எங்கிருந்து உண்டாகும். புரா
ணங்களில் ஆரியர்களின் நடையுடை வர்ணாசிரமம் முதலிய ஸகல
மும் தெளிவாய் விளக்கியிருக்கிறது. ஸகலத்துக்கும் ஆதாரம் புரா
ணம் வேதத்தை உயிராகக்கொண்டது. புராணங்களை இயற்றிய
வர்கள் பிராசீன புருஷர்களாயினும் சீர்திருத்தி நமக்கு அருளிச்
செய்தவர் வேதவ்யாஸபகவான். அந்த வியாஸர் பகவதம்சம்
பொருந்தியவர். அப்படியில்லாவிட்டால் மஹாபாரதத்தைஇயற்ற
யாரால் முடியும். புராணங்களுள் சில விஷ்ணுவையும் சில ருத்தி
ரனையும் புகழ்ந்து கூறியிருப்பதால் கல்பிதமென்று சிலர் கூறியி
ருக்கிறார்கள்.

பகவத்கீதை,

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां भक्तिं तामेव विदधाम्यहम् ॥

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் பக்திம் தாமேவ விதாம்யஹம் ॥

யார் என்னை எந்த ரூபமுள்ளவனாக நினைத்து பக்தியுடன் பூஜித்தாலும் அதே ரூபத்துடன் அவனை அனுக்கிரஹித்து நற்கதிக்குக் கொண்டு போகிறேன் என்று பொருள். ஆனால் பிறரால் பூஜிக்கப்படும் தெய்வத்தை ஒருக்காலும் இவன் இகழக்கூடாது என்பது மாத்திரம் மனதில் நன்றாய் பதிந்திருக்க வேண்டும். இவர் அபிப்பிராயப்படி புராணங்களுக்கு ஒரு காலம் உண்டென்று வைத்துக்கொண்டாலும் இக்காலம் போல் ரயில், தந்தி, அச்சுயந்திரசாலை முதலிய சாதனங்கள் அக்காலத்தில் உண்டா. எவ்வளவு பிரயாஸைப்பட்டு குளிர், வெயில், காற்று, ஆஹாரம் ஒன்றையும் கவனியாமல் உலகம் முழுவதும் சுற்றி அலைந்து கஷ்டப்பட்டு கற்றறிந்து நமக்கு அனுகூலமாகப் புராணங்களை எழுதி வைத்திருக்கும் நம் முன்னோர்களை பூஜிப்பது நலமா. தூஷித்து கற்பனை கட்டுக்கதைகள் என்று இகழுவது உசிதமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். பவிஷ்யத் புராணத்தில் கலி பிறந்து ஐயாயிரம்வருஷத்துக்கு மேல்வர்ணஸங்கரமம் உண்டாகுமென்றும் ஜனங்களுக்கு புராணம், வேதம், தர்மசாஸ்திரம்இதுகளில் பக்தி குறை உண்டாய் நாளாகவாக தெய்வபக்தி குருபக்தி புராணங்கள் அபத்தமென்று சொல்வது முதலியவைகள் ஸகஜமாய்விடும் என்று சொல்லியிருக்கிறது.

अणुप्रायाणि धान्यानि शमीप्राया महीरुहाः ।
शूद्रप्रायास्तथा वर्णाः भविष्यन्ति कलौ युगे ॥
अल्पवृष्ट्या महामेघाः अल्पसस्या वसुन्धरा ।
अल्पक्षीरप्रदा गावो भविष्यन्ति कलौ युगे ॥
अट्टशूला जनपदाः शिवशूलाश्चतुष्पदाः ।
प्रमदाः केशशूलिन्यो भविष्यन्ति कलौ युगे ॥

அணுப்ராயாணி தான்யாநி சமீப்ராயா மஹீருஹா: ।
சூத்ரப்ராயாஸ்ததா வர்ணா: பவிஷ்யந்தி கலௌ யுகே ॥

𑌅𑌲𑍍𑌪𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍 𑌮𑌹𑌾𑌮𑍇𑌘𑌾𑌃 𑌅𑌲𑍍𑌪𑌸𑌸𑍍𑌯𑌾𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾 ।
𑌅𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌗𑌾𑌵𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌲𑍌𑌯𑍁𑌗𑍇 ॥
𑌅𑌟𑍍𑌟𑌶𑍂𑌲𑌾𑌜𑌨𑌪𑌦𑌾𑌃 𑌶𑌿𑌵𑌶𑍂𑌲𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌥𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌮𑌦𑌾𑌃 𑌕𑍇𑌶𑌶𑍂𑌲𑌿𑌨𑍍𑌯𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌲𑍌𑌯𑍁𑌗𑍇 ॥

பெருத்த உருவுள்ள தான்யவித்துக்கள் அணுப்ரமாணமுள்ள தான்யங்களையும் பெருத்த விருக்ஷங்கள் வன்னி இலைக்குசமமான இலைகளையும், முதல் மூன்று வர்ணங்களும் நான்காவது வர்ணத்துக்குச்சமமாகவும், பெருத்த மேகங்கள் அல்பமழையையும், சொல்ப அளவுள்ள தான்யங்களை பூமியும், உத்தமமான பசு ஜாதிகள் கரண்டிக் கணக்கில் பாலையும், பிரதி கிராமங்கள் நல்சத்திதோறும் சாப்பாட்டு விக்கிரய கடையும், வேதத்தை விக்ரயம் பண்ணி ஜீவித்தலும், ஸ்திரீகள் சரீரத்தை விக்ரயம் பண்ணுதலும், விருத்தியாகும் என்று சொல்லியிருக்கிறது. புராண கர்த்தாக்கள் கீழ் சொன்ன விஷயங்கள் கலியுகத்தின் முடிவில் என்று எண்ணியிருந்ததாகத் தெரிகிறது. கலியுகத்தின் பிரமாணம் நான்கு லக்ஷம் சொச்சம் வருஷம் உள்ளது. ஜனங்கள் ரொம்ப கஷ்டப் படப்போகிறார்களே யென்று சில மஹான்கள் தோன்றி கலியுகத்தை சிக்கிரம் முடித்து கிருதயுகத்தைஆரம்பிக்கயத்தனிக்கிறார்கள் நமக்கு ஸ்வாராஜ்யம் கிடைப்பதற்கு ஒற்றுமை அவசியம் என்று ஸகல கக்ஷிக்காரரும் முறையிடுகிறார்கள். அயல் நாட்டார் நமக்குள் ஒற்றுமை கிடையாதென்றும் சுயாராஜ்யம் கொடுத்தால் அனர்த்தம் நேரிடும் என்றும் தொந்திரவு செய்கிறார்கள். விஷயம் இன்னதென்று புலப்படாமல் ஹிந்து என்ற பெயரை வைத்துக்கொண்டு வேதம், புராணம், தர்மசாஸ்திரங்கள் தப்பு கற்பிதம் என்று நமக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் முன்னோர்களின் சாபத்துக்கும், அழியா அபகீர்த்திக்கும், பாத்திமாகும்படி கட்டாயம் நேரும். ஆகையால் ஹிந்துமதஸ்தர்களான ஆஸ்திக ஜனங்கள் பூராவும் வேதங்களில் சொல்லப்பட்டும் ஸகலத்துக்கும் கண்ணாடிபோல் பிரகாசிக்கும் புராணங்களைபக்தியுடன் படித்து ஸந்தேகத்தைப்பெரியோர்களிடமாவது ஆசாரியர்களிடமாவது கேட்டுத்தெளிந்து பூஜித்து வருவார்கள் என்றுமனப்பூர்வமாய் நம்புகிறேன்.

தி. ந. தாததேசிகாசாரியார்.

# மதுரையில் ஸ்ரீ ஜகத்குரு விஜயம்.

ஸுப்பிரமண்ய அவதாரமான ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்தஸ்வாமிகளால் பாண்டியனின் இஷ்டத்தின்பேரில் சமணர்களை ஜயிப்பதற்காக எழுதிவிடப்பட்ட பத்திரிகை மதுரை வைகையின் நின்றும் ஸர்ப்பம்போல் சீறிப்புறப்பட்டு மேற்கே 10-மைல்தூரம் சென்று தண்ணீரில் மறைந்து, பிறகு ஸம்பந்தரின் வேண்டுகோளின்பேரில் ஓர் வயதுமுதிர்ந்த வேதியனாக ஈச்வரன் தோன்றி ஏடு அளித்தும், தானும் பத்திரிகை வடிவமான லிங்காகாரமாக அமைந்த ஸ்தலமாகிய திருவேடகத்தில் இவ்வருடம் ஸ்ரீமதாசார்யாள் வியாஸபூஜையையும்: சாதுர்மாஸ்ய ஸங்கல்ப்பத்தையும் நடத்தி அத்வைதானந்தபரீதாளாய் விளங்கிவந்திருப்பது யாவருமறிந்த விஷயமேயாகும். அவ்விதக் கருணாமூர்த்தியின் பேருளால் கிடைத்த ஆக்ஞாபத்திரிகையை சிரமேற்கொண்டு நாளது புரட்டாசி-மீ 12உ திருவேடகம் சென்றேன். அன்று அநேக பக்தர்கள் என்னைப்போல் குமிழ்ந்து வந்தனர். வைகையின் நடுவில் ஸ்ரீஸ்வாமிகள் ஸ்நானத்திற்காக அமைத்துள்ள ஓடுகால் பிரவாகமும், பிராமண, பண்டித, சிஷ்யகோஷ்டிகளும், பரிகரஸேவையும், தக்ஷிணாமூர்த்தியின, मौनव्याख्या ப்ரகடித பரப்ரஹ்ம தத்வம் என்றும் ச்லோக அவஸரத்தை நினைவூட்டிற்று. காலையில் பாஷ்ய பாடப்பிரவசனமும், ஸ்ரீ சந்திரமௌளீச்வர திரிகால ஆராதனமும், பிராம்மண ஸந்தர்ப்பணையும், வேதகோஷமும் இவ்வுலகை மறக்கச் செய்தது. அன்று காலை மங்களபாடமும், கருணாமூர்த்தியின் அமிருத மொழியும் அடியேனைப் புனிதமாக்கின. அன்று முதல் மூன்று நாட்களும் தர்சனானந்தத்தைப் பெற்று, 14உ சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரையம்பதிக்கு விச்வரூப யாத்திரையாகப்புறப்பட்ட ஸ்ரீ ஆசார்யாளுடன் கூடவே சென்றேன். இரவு 9-மணிக்கு மதுரை ஸேதுபதி ஹைஸ்கூலில் எற்கனவே கோவிலில் பிருதுகளுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அநேகமாயிரம்ஜனங்களால் ஸகல பிருதுகளோடும் எண்ணிறந்த பூர்ணகும்பங்களோடும் வந்தனத்துடன் வரவேற்க கருணாமூர்த்தி, அனுக்ரஹபுரஸ்ஸரத்துடன் ஆந்தோளிகையில் ஆரோகணித்து ஸ்ரீமீனாக்ஷி ஸோமஸுந்தரேச்வரர்களை தர்சிக்கப்புறப்பட்டனர். மத்தாப்பூ, அவிட், வாணங்கள், கிளாஸ் லைட்டுகளை கைவிளக்காக்கின முழுமதியும் இதுவே தகுந்த ஸமயம். இன்று

பூர்ணிமையாகையால் இந்த மஹோத்ஸவத்தை முழுமையும் காணலாம். மற்ற தினங்களில் நடக்கும் மஹோத்ஸவத்தை பூர்ணமாயனுபவிக்கும் பாக்கியம் பெருமல், பாதியில் உதிப்பேன், பாதியில் அஸ்தமிப்பேன் இன்று அக்குறை கிடையாது என்றது போல் தன் பதினுறுகலைகளுடன் சிரித்துக்கொண்டு விளங்கினன். இதற்குள் லோகமாதாவின் ஸன்னிதானம் கிட்டவே, ஆசார்யாள் பொற்ருமறையில் இறங்கி, பூலோக அமிருதமருந்தி, யானைமுகன் முதலாக வழிபட்டு தேவிக்கு ஓர் விலையுயர்ந்த பதக்கம் சாத்தித் திருக்கோவில்வலம் வந்து, உபநிஷத்பாராயணத்துடன் சொக்கி குளம் விடுதியில் விசித்திரமாக அலங்கரித்திருக்க, கே. வி. ராம ஸ்வாமி அய்யர் வக்கீல் அவர்களால் பூர்ணகும்பத்துடன் பிரார்த் திக்கப்பெற்று அங்கு தங்கி விளங்கினர்.

மறுநாள் காலையில் பக்தகோடிகள் பாதாரவிந்த தர்சனம் பண்ணிப்பயனடைவதைக் கேட்டும். பார்த்தும் தேஜ்பகதூர், ஸப்ரூ என்பவர் அதிவிநயத்துடன் வந்து ஸாஷ்டாங்கமாய் வணங்கி அருமை மொழியைச் செவியேந்தித் தங்கள் நாட்டிலும் இவ்வித விஜயயாத்திரை நடைபெறவேண்டுமென்று வேண்டி விடைபெற்றுச் சென்ருர். மத்தியானம் பூஜை முதலியவைகள் நடைபெற்றபின் மாலை 4-மணிக்கு ஸ்ரீ ஆசார்யாளின் உபந்யாஸ மென்று தெரிந்துகொண்ட அனேக பிரமுகர்களும் பண்டிதர்க ளும், ஜில்லா ஜட்ஜி, ஸப்ஜட்ஜி, முன்ஸீப், வக்கீல்கள் முதலியவர் கள் குவிந்து விட்டனர். ஆசார்யாள் அனுயாஸமாய் தன் அமிர்த வாக்கைச் சொரிந்தார்கள். அதை எழுத அற்ப அறிவுள்ள என் னல் முடியாவிடினும் சுருக்கத்தையாவது எழுதாமலிருக்க முடியவில்லை. (அதன் சுருக்கம்)

துர்லபமான மனுஷ்ய ஜன்மத்தை எடுத்ததற்கு முக்கியப் பிரயோஜனம் ஆத்மஸாக்ஷாத்காரம் பெருவதே. அதுவும் சாஸ் திர வாக்யார்த்தத்தினுலே உண்மையான சாஸ்திரார்த்தம் உக்த ஆசார்யாளாலேயே கிடைக்கவேணும். ஓர் பீரோவிலிருக்கும் பல மருந்துகளை வைத்தியனில்லாத ஒருவன் உபயோகித்தால் வியாதி நீங்காததோடு, பிராணஸம்சயமும் எப்படி ஏற்படுமோ அதுபோல் தத்வக்ஞானமில்லாதவர்களால் உபயோகிக்கப்படும் சாஸ்திரம் விபரீத பலத்தையே கொடுக்கும். ஆசார்ய அனுக்கிர ஹத்தினுலும், பக்தியினுலும், ஏகலவ்யன் முதலானவர்கள் பலமு

டைந்ததுபோல் உத்தம குருவால் முக்தியும் சித்திக்கும் அவைக ளில் கேட்டல், சிந்தித்தல், தியானம்செய்தல், என்று மூன்று பிரிவுகள் உண்டு இதையே உபநிடதங்களில்

श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः ।

ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ ॥

என்று கூறுகின்றன. கேட்பதால் ஈசுவரஸ்வரூபம் அறியப் பட்டு இதுவரையில் தெரிந்து கொள்ளாதிருந்த அபாவனை ஒழி கிறது. கேட்டதை யுக்திகளால் ஆராய்ச்சி செய்து ஒரு நிச்சய மான தீர்மானத்தைக்கொண்டு வருவதால் தான் வேருகஎண்ணி இருந்த எண்ணம் மாறி நிச்சயக்ஞானத்தால் அஸம்பாவனை ஒழி கிறது. பிறகு தீர்மானத்தை இடைவிடாது தியானம் செய்வ தால் விபரீதபாவனையான சரீர அபிமானம் நான் என்றும் நினைவு முதலான கெட்ட பழக்கம் அறவேயொழிய ஆத்மஸாக்ஷத்கா ரம் விளங்கும். அனுதி அவித்யா வாஸனையினுல் நம்மிடம் குடி கொண்டிருக்கும் அசுத்தத்தை. ஸ்வதர்மானுஷ்டானம் எனும் கருவியினுல் நீக்கி சித்தத்தை சுத்தம் செய்து தெளிவுற்றவுடன் உபாஸனையால் நிலைநிருத்த ஞானச்சுடர் விளங்கும் என்றுமநேக லௌகிக வைதிக திருஷ்டாந்தங்களால் பசுமரத்தாணிபோல் பண் டித பாமரர்களுக்கும் விளங்கும்படி அத்புதமாய் உபன்யஸித்தார் கள். பிறகு எல்லோரும் ஸந்தியாவந்தனத்திற்குச் செல்லும்படி ஆக்ஞாபித்துத் தானும் அனுஷ்டானம் செய்து ஸாயங்காலம் ஆராதனத்திற்குச் சென்றுர்கள். மேற்கண்ட உபன்யாஸத்தில் நான் எழுதினது லேசலேசமென்பது திண்ணம். இன்னும்மூன்று நாள் இங்கு விஜயம் செய்வார்கள்

"கிருஹ்யகஞ" உமாமகேசுவரசாஸ்திரி
காட்டுமன்னுர்கோவில்.

---

# நவராத்திரி.

ஒவ்வொரு வருஷமும் புரட்டாசிமீ பூர்வபக்ஷம் பிரதமை திதி முதல்ஒன்பது இரவுகளுக்கு நவராத்திரி என்றுபெயர்வழங்கி வருகிறது பத்தாவது தினமாகிய தசமியையும் சேர்த்து தசரா என்று மைசூர் பிரதேசங்களில் சொல்லுகிருர்கள் இப்பண்டி

கையை சிவாலயம், விஷ்ணு ஆலாயம், துர்க்காலயம் முதலிய எல்லா ஆலயங்களிலும் எல்லா இந்துக்களின் வீடுகளிலும் அனுஷ்டித்து வருகிறார்கள் நவராத்திரிக்கு முக்கியதேவதை பராசக்தியேயாகும் இந்த ஒன்பது நாள்களிலும் சக்தி பூஜை செய்வது மிகவும் விசேஷமென்று கருதப்படுகிறது அதன் விபரம் பின் வருபனவற்றால் விளங்கும்

## தக்ஷிணாமூர்த்தியின் யோகத்தை அழித்தல்.

உபப்பிர்ம்மாக்களில் ஒருவராகிய தக்ஷப்பிராஜாபதியின் யாகத்தை அழித்தபிறகு சக்தியைப் பிரிந்த சதாசிவ மூர்த்தி வெள்ளியங்கிரியினருகிலிருந்த ஓர் வட விருக்ஷத்தின் கீழ் தக்ஷிணாமூர்த்தியாய் ஸனகாதி முனிவர்களுக்கு ஞான முத்திரைகாட்டி உபதேசித்து யோகத்தில் இருந்து விட்டார் ஆனதினால் திருமூர்த்திகளின் தொழில்கள் யாவும் நின்றுவிட்டன அசுரர்களின் ஹிம்ஸை அதிகமாய்விட்டது இந்திராதிதேவர்கள் கூடித்திருமாலிடஞ்சென்று தங்கள் கஷ்டத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள் அவரும் ஆலோசித்துக் கடைசியில் மன்மதனையனுப்பி ஈசனின் யோகத்தைக் கலைத்துப் பார்வதியுடன் மணம் செய்து வைக்க வேண்டுமென்று தீர்மானித்தார். தேவர்களின் வேண்டுகோளின்படி தன்னுயிரையும் பாராட்டாமல் மன்மதன் யோக நித்திரையிலிருந்த பரமசிவன் மீது புஷ்பபாணத்தைத் தொடுத்தான் (இப்பவும் கொறுக்கையில் காணலாம்) ஈசன் தனது நெற்றிக்கண்ணைத் திறந்துபார்த்தார் உடனே மன்மதன் எரிந்து அழிந்தான்

## பண்டாசுரன் உற்பத்தி.

எரிந்துபோன மன்மதனுடைய சாம்பலினால் விசுவகர்மா ஓர் பொம்மை செய்தான். அதை சதாசிவமூர்த்தி தனது திருவருள் நோக்கால் கடாக்ஷித்தார் உடனே அது ஓர் அசுரனாக உயிர் பெற்றெழுந்தது. அவனுக்குப் பண்டன் என்று பெயரிட்டார்கள்.

அவன் விசுவகர்மாவின் சொற்படி பரமசிவனைப் பூஜித்து அறுபதினாயிரம் வருஷம் ஆளும்படி ஸாம்ராஜ்ய ஐசுவரியமும், மற்றுமொருவர் வெல்லாமலிருக்க வேண்டிய பலமும் வரமாகப் பெற்றுக் கொண்டான். பண்டாசுரனுடைய உற்பத்தியையும்,

வசபல முதலியவற்றையும் கேட்டமாத்திரத்தில் மற்ற அசுரர்களும் அவனுடன் வந்து சேர்ந்துகொண்டார்கள். பண்டனுடைய இரு புஜங்களிலிருந்தும் விசுக்ரான், விஷங்கன். என இரண்டு சகோதரர்கள் உண்டானார்கள்.

## பண்டாசுரன் அரசாக்ஷி

பண்டாசுரனுக்கு மயன், மஹேந்திரபுரிக்குத் தென்பாகத்தில் சோணிதபுரம் என்ற பட்டணத்தை நிருமாணம் செய்தான். பண்டாசுரன் பக்தியிற் சிறந்தவன். தினந்தோறும் அதிதிபூஜையும், சிவபூஜையும் மிகவும் சிரத்தையுடன் செய்வான். அசுரர்களுடைய துர்புத்தியைக் கேட்காமல் தன் எட்டு மந்திரிமார்களுடைய நற்புத்திகளைக் கேட்டு ராஜ்யபரிபாலனம் செவ்வனே நடத்திவந்தான்.

இப்படியிருக்கையில் ஸாம்ராஜ்யம் பெற்றிருக்கும் கர்வத்தினால் தேவர்களையும் திருமூர்த்திகளையும் ஹிம்ஸைசெய்ய ஆரம்பித்தான். ஐயோ பாவம்! இந்த துஷ்டனிடம் அகப்பட்டுக்கொண்ட தேவர்களின் துயரத்தை என்னென்று சொல்வேன். தேவர்கள் 'வேலிக்கு முள்ளிடக் காலுக்காயிற்று' என்பதுபோல் சூரபத்மனைக் கொல்வதற்கு நாம் ஈசனை யோகத்திலிருந்தெழுப்ப நமக்கே விபரீதம் வந்ததேயென்று வருந்தினார்கள். பண்டாசுரனைக் கொல்ல யோசித்தார்கள். முதலில் அவனது நற்செய்கைகளை நிறுத்த எண்ணி, மாயா சக்தியை அனுப்பினார்கள்.

மாயை தன்னுடைய தாதிமார்களுடன் சோணிதபுரம் சென்று ஓர் குளக்கரையில் உட்கார்ந்து இனிய கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தாள். பண்டாசுரன் வழக்கம்போல் ஸ்நானத்திற்கு அங்கு வந்தான். இனிய நாதத்தைக் கேட்டான், மாயையைக் கண்டு அவள் மேல் மோஹம் கொண்டான். விண்டான் சிவபூஜையை மறந்தான். மறந்தான் ராஜ்யத்தை இப்படியாக மாயையின் வலையில் பண்டன் சிக்கிக்கொண்டிருக்கும் தருணத்தில் நாதமுனிவர் தேவர்களிடம் சென்று நீங்கள் தேவியைக் குறித்துத் தவம் செய்தால் அத்தேவியின் திருவருளால் நீங்கள் ஜெயமடைவீர்களென்று சொல்லிவிட்டுச்சென்றார்.

## தேவர்களின் தபசு.

நாரதருடைய சொல்லைக் கேட்ட இந்திராதி தேவர்கள் ஆகாரம், நித்திரை முதலியவைகளை நீக்கிப் பதினாயிரம் வருஷ

காலம் தேவியைக் குறித்துத் தவம் செய்தார்கள். மகா சக்திப் பிரத்யக்ஷமாகவில்லை. இப்படியிருக்கையில் தேவர்கள் தவம் செய்கிறார்களென்று அசுரகுருபண்டாசுரனிடம் சொன்னார். உடனே அவன் ஸேனைகளுடன் தேவர்களிடம் வந்தான். அவர்களைச் சுற்றிலும் மாயாகோட்டை கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். தன்னாலானமட்டும் அதைப் பெயர்த்துவிட முயன்றான். முடியாமல் திரும்பிப்போய்விட்டான். இந்த மாயாகோட்டையைக்கண்ட தேவர்கள், அது பண்டாசுரனால் போடப்பட்டிருக்கலாமென்று எண்ணினார்கள். கடைசியில் எல்லோரும் யாக குண்டத்தில் விழ சித்தமானார்கள். அச்சமயம் அந்த குண்டத்தின் மத்தியில் ஓர் ஜோதியைக் கண்டார்கள்.

## லலிதாதேவியின் அவதாரம்.

யாக குண்டத்திலிருந்து கிளம்பிய ஜோதியில் ஸ்ரீசக்ராதத்தையும் அதன் மத்தியில் சர்வலோகமாதாவாகிய லலிதாதேவியையுங் கண்டார்கள். உடனே தேவர்கள் தேவியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதித்து குறைகளைச் சொல்லி முறையிட்டுக் கொண்டார்கள். தேவர்களின் கஷ்டத்தைப் பார்த்த லலிதா தேவி மனமிரங்கி அவர்களுக்குப் பண்டனைக் கொல்வதாகச் சொல்லி அபயமளித்து சந்தோஷிக்கச் செய்தாள்.

## தேவியின் திருமணம்.

மஹேச்வரி. லலிதா சொரூபமாக அவதரித்திருக்கிறாளென்பதையறிந்து மும்மூர்த்திகளும், முனிவர்களும், கந்தர்வர்களும், திக்பாலகர்களும், ஸப்தகன்னிமார்களும் தெரிசனத்திற்கு வந்தார்கள். தேவிக்குத் தகுந்த ஓர்பட்டணம் விசுவகர்மாவால் நிர்மாணிக்கப்பட்டது. பட்டணத்தின் அமைப்பையும் தேவியின் அழகையும்பார்த்த பிர்ம்மாதேவிக்குக் கல்யாணஞ் செய்யவேண்டுமென எண்ணினார். திடீரென்று ஜெகதீசுவரன் தேவியின் அழகுக்குத் தகுந்தாற்போற் மன்மதரூபத்துடனும் காதிற் குண்டலங்களுடனும், பீதாம்பரத்துடனும் காமேசுவரர் என்னும் நாமத்துடன் தேவியின் முன்வந்து நின்றார். பராசக்தியும் காமேசுவரரைப் பார்த்து மோஹித்தாள். தன் கழுத்திலிருந்த மண மாலையை எடுத்துக் காமேசர் புயத்தில் சூட்டினாள். இவை அனைத்தையும்பார்த்துக்கொண்டிருந்த பிரும்மாதி தேவர்கள் விசுவகர்

மாவைக் கொண்டு ஓர் அழகிய கல்லியாண மண்டபம் நிரூபித்தார்கள். அந்த மண்டபத்தின்கண் தேவர்கள புஷ்பமாரிபொழியப் பதினெட்டு வாத்தியங்களும் முழங்க, மகாவிஷ்ணு தாரை வார்த்துக்கொடுக்க. காமேச்வாருக்கும் காமேச்வரிக்கும் (லலிதா) கலியாணம் நடந்தேரியது.

பிறகு தேவர்களொவ்வொருவரும் இவர்களுக்கு வேண்டிய அஸ்திர சஸ்திரங்களைக் கொடுத்தனர். ஸாம்ராஜ்யபட்டாபிஷேகம் செய்து வைத்தார்கள். இப்படியாக காமேச்வாரும், லலிதா தேவியும் அநேக ஆயிரம் வருஷகாலம் சுகமாயிருந்தார்கள்.

## தேவி யுத்ததிற்கு புறப்படுதல்.

தேவர்கள் யாவரும் அனேக வருஷங்களாக தேவியின் கோட்டை வாயிலில் காத்திருந்தார்கள். இதை நாரத முனிவரால் அறிந்த லலிதாதேவி, ரத, கஜ, துரக பதாதிகளுடனும் சதுரங்க சேனைகளுடனும் யுத்தத்திற்குப் புறப்பட்டாள். அம்பிகை யுத்தகோலமாய் வருவதைக் கேட்ட பண்டன் கோட்டைவாயில்களுக்குக் காவல் வைத்துச் சேனாதிபதிகளான தூமதன், குருண்டன் இவர்களைச் சண்டைக்கு அனுப்பினான். அவர்கள் சண்டையில் மாண்டார்கள். பிறகு பண்டனுடைய சகோதரர்களையும் அதன் பிறகு தன் புத்திரர் முப்பது பேர்களையும் அனுப்பினான். அவர்கள் பராசக்தியால் ஏவப்பட்ட பாலாம்பாளென்றும் சக்தியின் அம்சத்தால் கொல்லப்பட்டார்கள். இப்படி மூன்று நாட்கள் சென்றன.

## பண்டாசுரன் யுத்தத்திற்கு வருதல்

சேனாதிபதிகளும், சஹோதரர்களும், புத்திரர்களும், மடிந்ததைக்கேட்ட பண்டன் மனச்சோர்வடைந்தான். கோபங்கொண்டான்.! பற்களைகடித்துக்கொண்டு உதடு துடிதுடிக்கக்கண்களில் நெருப்புப் பொறி பறக்கத் தன்னுடைய சேனைகளுடன் யுத்தகளத்திற்கு வந்தான்.

## தேவிக்கும் பண்டாசுரனுக்கும் யுத்தம்.

பண்டன் தன் சேனைகளை அனுப்பி அம்பிகையின் சேனையை முறியடிக்க ஏவினான், உடனே அம்பிகைக்கு மஹாகோபமுண்டாகி அவனுடைய சைன்யத்தையும் யானை, குதிரை, முதலிய எல்லாவற்றையும் சேதித்தாள்.

இதைக் கண்ட பண்டன் மாயையினால் சும்பன், நிசும்பன், சண்டன், முண்டன், சுந்தோபசுந்தன். மஹிஷாஸுரன். முதலியவர்களைப் பராசக்தியுடன் சண்டை செய்ய ஏவினான், இதை அறிந்த லலிதாதேவி துர்க்கையை உண்டாக்கி இவர்களைப் பக்ஷிக்கச் செய்தாள். நவராத்திரியில் ஒன்பதாவது தினமாகிய மஹாநவமியன்றையதினம துர்காதேவி மஹிஷாசுரனைக் கொன்றாள். (இப்போதும எல்லா சிவஸ்தலங்களிலும நவராத்திரி உத்ஸவத்தின் ஒன்பதாவது தினத்தன்று தேவியை மஹிஷாசுரமர்த்தனி போல் அலங்கரிப்பதைப் பார்க்கலாம்) மறுதினமாகிய தசமியன்றய தினம் தேவி தனது நாயகர் காமேசுவாரிடமிருந்து அஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு தன்னை எதிர்த்து வந்த பண்டாசுரனிடம் யுத்தம் செய்தாள். அன்று ஸந்தியாகாலத்தில் லலிதாதேவி காமேசுவரா அஸ்திரத்தை எடுத்துத் தன் கோதண்டத்திற் பூட்டி பண்டாசுரன் மீது விட்டாள். அது பண்டாசுரன் மார்பில் பாய்ந்தது. அதனால் அவன் தரையில் வீழ்ந்து உயிர் துறந்தான். சக்தியின் ஜ்வாலையினால் அவனுடல் நீறாய்விட்டது.

இப்படியாக தேவி சகலதேவர்களையும் ஹிம்சை செய்துகொண்டிருந்த பண்டாசுரனைக் கொல்லும்பொருட்டு யுத்தம் செய்த (புரட்டாசிமீ பூர்வபக்ஷம் பிரதமை முதல் ஒன்பது தினங்களை நவராத்திரி எனவும் பராசக்தி பண்டனைக்கொன்று ஜெயமடைந்த தசமி தினத்தை விஜயதசமி என்றும் கூறுவர். அந்நாள் முதல், தேவர், முனிவர், மனிதர் முதலிய எல்லோரும் நவராத்திரியை அனுஷ்டித்து சக்தியைப் பூஜித்துத் தங்கள் தங்களுடைய மனோபீஷ்டங்களைபெற்றனர்என்று தேவிபாகவதத்தில்அகஸ்திய ஹயக்ரீவஸம்வாதத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நவராத்திரியில் பராசக்தியைக் குறித்துப் பூஜை செய்து ஸ்ரீ ராமர் தன்பத்தினியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டார். அர்ஜுனனும் விராட நகரில நடந்த சண்டையில் ஜெயமடைந்தான். மஹாலெக்ஷ்மி திருமலையிலுள்ள ஸ்ரீநிவாஸப்பெருமாளைப் பதியாகப் பெற்றாள். சுகேது தான் இழந்த நாட்டையும், ஓர் சற்புத்திரனையும் ஒருங்கே அடைந்தான். இதைப் பின் வருங் கதையிற்காண்க

K. நாராயணசாமி அய்யர்.